Words of Wisdom

HONG KONG BIBLE SOCIETY TEV660P (WW4) 1987 3M ISBN 962 293 141 3

ரூத்

Words of Wisdom

நகோமியும் அவள் கணவனும் இஸ்ரேல் நாட்டிலுள்ள பெத்லகேம் என்னும் ஊரில் வாழ்ந்து வந்தார்கள்.

அவர்களுக்கு இரண்டு குமாரர் இருந்தனர்.

இஸ்ரேல் நாட்டில் ஒரு கொடிய பஞ்சம் ஏற்பட்டதால் அவர்களுக்குச் சாப்பிட ஒன்றுமில்லாதிருந்தது.

ஆகவே முழுக் குடும்பமாக மோவாப் நாட்டுக்குச் சென்றனர்.

மோவாப்பில் சில காலம் இருந்தபின் நகோமியின் கணவன் இறந்து போனான்.

நகோமியின் இரண்டு குமாரரும் வளர்ந்து பெரியவரானார்கள். அவர்கள் மோவாபியப் பெண்களை விவாகம் செய்தனர்.

பின் பத்து வருடங்கள் சென்றன நகோமியின் இரண்டு குமாரர்களும் இறந்தார்கள் நகோமி தன் இரு மருமக்களுடனும் வாழ்ந்து வந்தார்கள்.

சில காலம் சென்றபின் நகோமி அவர்களிடம் ''நான் பெத்லகேமுக்கு மீண்டும் போகிறேன். அங்கே தற்போது ஆகாரம் இருக்கிறது நீங்கள் மோவாப்பிலே இருந்துவிடுங்கள் இது உங்கள் சொந்த ஊர்'' என்றாள்.

ஆனால் ரூத் என்ற ஒரு மருமகளோ, நகோமியிடம், ''உங்கள் சனங்கள் என் சனங்கள், உங்கள் கடவுள் என்னுடைய கடவுள். நீங்கள் போகும் இடமெல்லாம் நானும் வருவேன்,'' என்றாள். இருவரும் பெத்லகேம் சென்றனர்.

அவர்கள் அறுவடை நெருங்கும் காலத்தில் பெத்தலகேமை அடைந்தனர்.

எல்லோரும் அறுவடை செய்வதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

ஒரு நாள் ரூத் வயல்களுக்குச் சென்றாள். வேலையாட்கள் ஏழைகளுக்கும், விதவைகளுக்கும் கீழே விட்டுச் சென்ற தானியங்களைச் சேர்த்துக் கொண்டிருந்தாள்.

ரூத் போவாஸ் என்னுமொருவனுடைய வயலுக்குச் சென்றாள். இந்த போவாஸ் நகோமியின் உறவினன்.



போவாஸ் ரூத்தைப் பார்த்தான். பார்த்து, ''யார் இந்த அந்நியப் பெண்?'' என்று, கேட்டான். வேலையாட்கள் அவனிடம், அவள் மோவாபிலிருந்து வந்த நகோமியின் மருமகள் என்று சொன்னார்கள். போவாஸ் வேலையாட்களிடம், ''ரூத் பொறுக்கிக் கொள்வதற்காக அதிக அளவு தானியங்களை விட்டு வையுங்கள்'' என்று கட்டளையிட்டான்.



போவாஸ் ரூத்தைத் தன் வயலில் வேலை செய்யுமாறு சொன்னான்.
''எனது வேலையாட்கள் உன்னை நன்றாகக் கவனிப்பார்கள்'', என்றான்.

''அவர்கள் தங்கள் உணவையும் பானத்தையும் அவளுடன் பகிர்ந்து
கொள்வார்கள்'' என்றான்.





ஒவ்வொரு நாளும் மாலையில் ரூத் தானியங்களை வீட்டுக்கு எடுத்துச் சென்றாள். நகோமி மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள்.

நகோமி ரூத்திடம், ''கடவுள் எங்களுக்கு உதவி புரிகிறார். போவாசின் வயலுக்கு ஒவ்வொருநாளும் போ. அவன் எனது உறவினர்களில் ஒருவன்'' என்றான்.

போவாஸ் பெத்தலகேமில் இருந்து சனங்களைப் பார்த்து, ''நகோமியும் ரூத்தும் தனித்து இருப்பதை நான் விரும்பவில்லை. நான் அவர்களைக் கவனித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே நான் ரூத்தை விவாகம் செய்ய விரும்புகிறேன்''. என்றான். எனவே போவாஸ் ரூத்தை விவாகம் செய்து கொண்டான்.

பின்னர் போவாசுக்கும், ரூத்துக்கும் ஒரு மகன் பிறந்தான். அவனை ஓபேத் என அழைத்தனர். நகோமி அவனைக் கவனிப்பதில் மகிழ்ச்சியடைந்தாள். பெத்லகேமிலுள்ள பெண்கள் யாவரும் ''கடவுள் நல்லவர். நகோமியின் குடும்பத்திற்கு, அவர் இன்னுமொரு மகனைக் கொடுத்திருக்கிறார், அவன் பிரபல்யமாகக் கடவன்,'' என்றனர்.

ரூத்

எலிமெலேக்கும் அவன் குடும்பமும் மோவாபுக்குச் செல்லுதல்

முன்னொரு காலத்தில் இஸ்ரேலில் ஒரு ராஜா தோன்றப் பல நாட்களுக்கு முன் அத்தேசத்தில் ஒரு கொடிய பஞ்சம் உண்டாயிற்று. யூதாவிலுள்ள பெத்லகேம் ஊராகிய எப்பிராத்தியராகிய, எலிமெலேக்கும் அவன் மனைவி நகோமியும், அவர்கள் இரண்டு புத்திரராகிய மக்லோன், கில்லியோன் ஆகியோருடன், சிறிது காலம் தங்கியிருப்பதற்காக மோவாப் தேசத்திற்குப் போனார்கள். அங்கே இருக்கும் காலத்தில் எலிமெலேக்கு, இறந்து போனான். எனவே நகோமி தன் இரண்டு புத்திரருடனும், அவர்கள் மணம்முடித்த மோவாப்பிய பெண்களாகிய ஓர்பாள், ரூத் என்பவர்களுடனும் தனித்து விடப்பட்டாள். பத்துவருடங்களுக்குப் பின்மக்லோன், கில்லியோன் ஆகிய இருவரும் இறந்துபோனார்கள், எனவே நகோமி மறுபடியும் கணவன், பிள்ளைகள் ஆகியோரை இழந்து தனித்துப் போனாள்..

நகோமியும் ரூத்தும் பெத்லகேமுக்குத் திரும்புதல்.

சில காலஞ்சென்றபின் கர்த்தர் தன் சனங்களுக்கு ஆதாரம் கொடுத்ததன் மூலம் அவர்களை ஆசீர்வதித்திருக்கிறார். என்பதை நகோமி கேள்விப்பட்டாள். தன் மருமக்களை அழைத்துக் கொண்டு மோவாப்பை விட்டுப் புறப்பட ஆயத்தம் செய்தாள். வழியிலே அவள் தன் மருமக்களைப் பார்த்து, அவர்களிடம், நீங்கள் உங்கள் தாய்மார்களுடன் உங்கள் வீட்டிலேயே தங்கியிருங்கள் ''நீங்கள் எனக்குச் செய்த எல்லாவற்றுக்கும் கர்த்தர் உங்களுக்கு நன்மை செய்வாராக. நீங்கள் திரும்பவும் மணம்முடித்து குடியும் குடித்தனமுமாக இருக்கக் கர்த்தர் அநுகூலம் செய்வாராக'' என்றாள்.

நகோமி விடை பெற்றபோது, அவர்கள் அழ ஆரம்பித்தார்கள், தாங்களும் அவளுடன் சேர்ந்து வரப்போவதாகச் சொன்னார்கள். ''நீங்கள் திரும்பிப் போகவேண்டும்'' என்று நகோமி பதிலுரைத்தாள் ''ஏன் என்னுடன் வரப் போகிறீர்கள்? உங்களுக்கு புருஷராகும்படிக்கு, இனிமேல் என்கர்ப்பத்தில் எனக்குப் பிள்ளைகள் உண்டாகுமோ? என்மக்களே திரும்பிப் போங்கள். நான் வயது சென்றவள். ஒரு புருஷனுடன் வாழத்தக்கவள் அல்ல. அப்படிப்பட்ட நம்பிக்கை எனக்குண்டாயிருந்து, நான் இன்றிரவில் ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டு, பிள்ளைகளைப் பெற்றாலும் அவர்கள் பெரியவர்களாகுமட்டும், புருஷருக்கு வாழ்க்கைப்படாதபடி, நீங்கள் பொறுத்திருப்பீர்களோ? கர்த்தருடைய கை எனக்கு விரோதமாக இருப்பதால் உங்கள் நிமித்தம் எனக்கு மிகுந்த கவலை ஏற்படுகிறது'', என்றாள்.

அப்பொழுது அவர்கள் சத்தமிட்டு அழுதார்கள். ஓர்ப்பாள் தன் மாமியை முத்தமிட்டுப் போனாள். ரூத்தோ அவளை விடாமற் பற்றிக் கொண்டாள். அதற்கு நகோமி; ''ரூத் உன் சகோதரி தன் ஜனங்களிடத்திற்கும், தன் தேவர்களிடத்திற்கும் திரும்பிப்போய்விட்டாளே நீயும் அவருடன் வீட்டுக்குத் திரும்பிப் போ' என்றாள்.

அதற்கு ரூத் ''என்னைத் திரும்பிப் போகச் சொல்லவேண்டாம். உங்களுடன் கூடவிருந்து வாழவிடுங்கள். உங்கள் ஜனங்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் உங்கள் தேவன் என் தேவனாயிருப்பார். நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து அங்கே அடக்கம் பண்ணப்படுவேன். மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்'' என்றாள்.

அவள் தன்னுடன் கூட வர மனஉறுதியாய் இருக்கிறதை நகோமி கண்டு அதன்பின்பு ஒன்றும் பேசவில்லை.

அப்படியே இருவரும் பெத்லகேம் மட்டும் நடந்து சென்றார்கள். அவர்கள் அங்கே சென்றபோது, ஊரார் எல்லாரும் அவர்களைக் குறித்து ஆச்சரியப்பட்டு, இவள் நகோமியோ என்றுபேசிக் கொண்டார்கள்,

அதற்கு அவள், ''நீங்கள் என்னை நகோமி என்று சொல்லாமல் மாராள் என்று சொல்லுங்கள், ஏனெனில் கர்த்தர் எனக்குமிகுந்த கசப்பைக் கட்டளை இட்டார். நான் நிறைவுள்ளவளாய்ப் போனேன், கர்த்தர் என்னை வெறுமையாய்த் திரும்பி வரப் பண்ணினார்'' என்றாள்.

நகோமியும் அவள் மருமகளும் வாற்கோதுமை அறுப்பின் துவக்கத்தில் பெத்லகேமுக்கு வந்தார்கள்.

ரூத் போவாசின் வயலில் வேலை செய்தல்.

நகோமிக்கு அவள் புருஷனுடைய உறவினனாகிய போவாஸ் என்னும் பெயருள்ள மிகுந்த ஆஸ்திக்காரனாகிய இனத்தவன் ஒருவன் இருந்தான். ரூத் நகோமியைப் பார்த்து, ''நான் வயல்வெளிக்குப் போய், யாருடையகண்களில் எனக்குத் தயை கிடைக்கிறதோ, அவர் பிறகே கதிர்களைப் பொறுக்கிக்கொண்டு வருகிறேன்'' என்றாள்.

நகோமி அதற்கு இணங்கினாள்.

ரூத் வயல் வெளிக்குச் சென்று அறுக்கிறவர்கள் பிறகே பொறுக்கினாள். தற்செயலாய் அவள் வேலைசெய்த வயல் போவாசுடையதாய் இருந்தது. சிலநாட்களுக்குப்பின் போவாஸ் பெத்லகேமிலிருந்து வந்து அறுக்கிறவர்களைப் பார்த்து, ''கர்த்தர் உங்களுடனே இருப்பாராக'' என்றான். அதற்கு அவர்கள் ''கர்த்தர் உம்மை ஆசீர்வதிப்பாராக'' என்றார்கள்.

பின்பு போவாஸ் தன் கண்காணியை நோக்கி, ''இந்தப் பெண்பிள்ளை யாருடையவள்?'' எனக் கேட்டான்.

அக் கண்காணி பிரதியுத்தரமாக, இவள் மோவாப் தேசத்திலிருந்து நகோமியுடன் கூடவந்த மோவாபியப் பெண்பிள்ளை. அறுக்கிறவர்கள் பிறகே அரிக்கட்டுகளிலிருந்து சிந்தினதைப் பொறுக்கிக் கொள்ளுகிறேன் என்று அவள் என்னிடத்தில் கேட்டுக் கொண்டாள் காலையில் துவங்கி இதுவரைக்கும் இங்கே இருக்கிறாள். இப்பொழுது இவள் குடிசைக்குவந்து கொஞ்சநேரந்தான் ஆயிற்று'' என்றான்

பின்னர் போவாஸ் ரூத்திடம், ''நான் சொல்லும் புத்திமதியைக் கேள். இவ்விடத்தை விட்டுப் போகாமல், இங்கே என் ஊழியக்காரப் பெண்களோடு கூடவே இரு. வேறுவயலுக்குப் போகவேண்டாம். அவர்கள் அறுப்பறுக்கும் வயலை நீ பார்த்து அவர்கள் பிறகே போ. ஒருவரும் உன்னைத் தொடாதபடி அவர்களுக்குக் கட்டளை இட்டிருக்கிறேன். உனக்குத் தாகம் ஏற்பட்டால் வேலைக்காரர் மொண்டு கொண்டுவந்ததில் குடிக்கலாம்'' என்று தெரிவித்தான்.

அப்பொழுது ரூத் தரையிலே முகங்குப்புற விழுந்து ''ஏன் உமக்கு என்மீது இவ்வளவு அக்கறை? நான் ஓர் அந்நியப் பெண்ணாயிருக்க எனக்கு ஏன் இவ்வளவு அன்பு காட்டுகிறீர்? என வினவினாள்.

அதற்கு போவாஸ், ''உன் புருஷன் மரணமடைந்த பின்பு நீ உன் மாமியாருக்காகச் செய்ததும், உன் தகப்பனையும், தாயையும் விட்டுவிட்டு முன்னே நீ அறியாத தேசத்திற்கும் அந்நிய ஜனங்களண்டைக்கும் வந்ததுமான எல்லாவற்றையும் கேள்விப்பட்டேன். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் செட்டைகளின் கீழ் புகலிடம் தேடிவந்த உனக்குக் செய்கைக்குத் தக்க பலனைக் கர்த்தர் கட்டளை இடுவாராக'' என்றான். அதற்கு ரூத் அவனிடம், ''நான் உங்களுடைய வேலைக்காரரில் ஒருத்திக்கு சமானமாயிராவிட்டாலும், நீங்கள் எனக்கு ஆறுதல் சொல்லி அன்பாகப் பேசினீர்கள் உங்கள் கண்களில் எனக்குத் தயை கிடைக்கவேண்டும்,'' என்று சொன்னாள்.

சாப்பாட்டு வேளையின் போது போவாஸ் அவளைப் பார்த்து, ''நீ இங்கே வந்து, இந்த அப்பத்திலே புசித்து, காடியிலே உன் துணிக்கையைத் தோய்த்துக் கொள்'' என்றான். அப்படியே அவள் அறுப்பறுக்கிறவர்கள் அருகே உட்கார்ந்தாள். அவளுக்கு வறுத்த கோதுமையைக் கொடுத்தான். அவள் சாப்பிட்டுத் தீர்ந்து மிகுதியை வைத்துக் கொண்டாள். அவள் கதிர் பொறுக்கிக் கொள்ள எழுந்த போது, போவாஸ் தன் வேலைக்காரரை நோக்கி, ''அவள் அரிக்கட்டுகளின் நடுவே பொறுக்கிக் கொள்ளட்டும். அவளைத் தொந்தரவு பண்ணவேண்டாம். அத்துடன் பொறுக்கிக் கொள்ளும்படி அவளுக்காக அரிகளிலே சிலதைச் சிந்த விடுங்கள்'' என்றான்.

அவ்வாறே சாயங்காலமட்டும் வயலில் கதிர்களைப் பொறுக்கினாள் பொறுக்கினதை அளந்தபோது ஏறக்குறைய பத்துக் கிலோ நிறையுள்ளதாய் இருந்தது. அதை எடுத்துக் கொண்டு ஊருக்குச் சென்றபோது, அவளுடைய மாமி பார்த்தாள். தான் கொண்டு வந்திருந்த சாப்பாட்டையும் அவளிடம் கொடுத்தாள். அப்பொழுது அவளுடைய மாமி, ''இன்று எங்கே கதிர் பொறுக்கினாய்? எவ்விடத்தில் வேலை செய்தாய்? என்று கேட்டாள் உன்னை விசாரித்தவன் ஆசீர்வதிக்கப்படுவானாக; என்றாள்,

ரூத் அவளிடம் தான் வேலை செய்த வயலின் சொந்தக்காரனுடைய பெயர் போவாஸ் என்று தெரிவித்தாள்.

"கர்த்தர் போவாஸை ஆசீர்வதிப்பாராக!" என்று நகோமி சொன்னாள். அவள் ரூத்திடம் "உயிரோடிருக்கிறவர்களுக்கும், மரித்தவர்களுக்கும், தயவு செய்கிற கர்த்தராலே அவன் ஆசீர்வதிக்கப்படுவானாக. அந்த மனிதன் நம் நெருங்கிய உறவினன். நம்மை ஆதரிக்கிற சுதந்திரவாளிகளில் ஒருவனாயிருக்கிறான்" என்றாள்.

பின்னும் ரூத் நகோமியிடம், "அறுப்பெல்லாம் அறுத்துத் தீருமட்டும் என்னை அவர் தன் வயலில் வேலைக்காரிகளோடே கூட இரு" என்றும் சொன்னார், என்றாள்.

நகோமி அவளிடம், "வேறொரு வயலில் மனுஷர் உன்னை எதிர்க்காதபடிக்கு நீ அவன் வேலைக்காரிகளோடே போகிறது நல்லது" என்றாள்.

வாற்கோதுமை அறுப்பு முடியுமட்டும் ரூத் போவாசுடைய வேலைக்காரருடன் கூட விருந்து அவன் வயலில் கதிர் பொறுக்கினாள். அவள் தொடர்ந்து தன் மாமியுடன் தங்கி இருந்தாள்.

ரூத் தன் மணாளனைக் கண்டடைதல்

சிலகாலஞ்சென்றபின் நகோமி ரூத்தைப் பார்த்து "நீ தனிமையில் இருப்பது சரியல்ல நான் உனக்கு ஒரு மணாளனைத் தேடப் போகிறேன். நீ திருமணம் புரிந்து குடும்பமாக இருக்கவேண்டும்" என்று சொன்னாள், பின்னும் அவள் சொன்னதாவது, "அவன் இன்று இராத்திரி களத்தில் வாற்கோதுமை தூற்றுவான். நீ குளித்து, எண்ணெய் பூசி, உன் வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு அந்தக் களத்திற்குப் போ. அவன் புசித்துக் குடித்துத் தீருமட்டும் அவனுக்கு எதிர்ப்படவேண்டாம். அவன் படுத்திருக்கும் இடத்தை நீ பார்த்திருந்துபோய் அவன் கால்களில் மூடியிருக்கிற போர்வையை ஒதுக்கி நீ படுத்துக்கொள் அப்பொழுது நீ செய்ய வேண்டியதென்னவென்பதை அவன் உனக்குச் சொல்லுவான்" என்றாள்.

ரூத் அதற்கு, "நீர் சொல்லுகிறபடி யாவும் செய்வேன்" என்றாள்.

ரூத் தன் மாமியார் தனக்குச் சொன்ன எல்லாவற்றையும் செய்தாள், போவாஸ் புசித்துக் குடித்து சந்தோஷமாயிருந்து ஒரு அம்பாரத்து அடியில் வந்து படுத்துக் கொண்டான். ரூத் மெல்லப் போய் அவன் கால்களின்மேல், மூடியிருக்கிற போர்வையை அகற்றிப் படுத்துக் கொண்டாள். பாதி இராத்திரியில் சந்தியாக அவன் விழித்துப் பார்த்தபோது ஒரு பெண் தன் பாதத்தண்டையில் படுத்திருப்பதைக் கண்டு, "யார் நீ" என்று கேட்டான். அதற்கு அவள் "நான் ரூத், நீர் சுதந்திரவாளி ஆகவே உமது அடியாளை ஏற்றுக் கொள்ளும்" என்றாள்.

அதற்கு போவாஸ், "கடவுள் உன்னை ஆசீர்வதிப்பாராக! நீ ஏழை அல்லது பணக்கார வாலிபர்களுக்குப் பிறகே போகாமல், இப்படி நடந்ததால் உன் முந்திய நற்குணத்தை விட பிந்தின நற்குணம் மேலானது. ஊரில் எல்லாப் பெண்களும் உன்னை நல்லவள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். நான் உனது நெருங்கிய உறவினன் என்பது உண்மைதான். ஆயினும் என்னை விட இன்னும் நெருங்கிய உறவினனாகிய இன்னொருவன் உனக்கிருக்கிறான். இராத்திரி இங்கே தங்கி இரு. நாளைக்கு அவன் உன்னை முறையாக விவாகம் பண்ணச் சம்மதித்தால் நல்லது. அவன் உன்னை விவாகம் செய்யச் சம்மதிக்காதுபோனால், நான் சுதந்திர முறையாக உன்னை விவாகம் செய்வேன் என்று ஜீவனுள்ள தேவனுடைய பெயரில் ஆணையிடுகிறேன் விடியற்காலை மட்டும் படுத்திரு" என்றான்.

அவள் விடியற்காலை மட்டும் அவன் பாதத்தண்டையில் படுத்திருந்து, ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியாததற்கு முன் எழுந்திருந்தாள். போவாஸ் ரூத் போர்வையில் ஆறுபடி வாற்கோதுமையை அளந்து போட்டான். அவள் தன் மாமியினிடத்தில் வந்தபோது, "என் மகளே உன் செய்தி என்ன?" என்று கேட்டாள். போவாஸ் தனக்குச் செய்த எல்லாவற்றையும் விபரித்தாள்.

அத்துடன் அவர், "நீ உன் மாமியாரண்டைக்கு, வெறுமையாகப் போக வேண்டாம்," என்று சொல்லி ஆறுபடி வாற்கோதுமையைக் கொடுத்தார் எனத் தெரிவித்தாள்.

நகோமி அவளிடம், "இந்தக் காரியம் என்னவாய் முடியுமட்டும் பொறுமையாக இரு. அந்த மனுஷன் இக்காரியத்தை முடிக்குமட்டும் இளைப்பாற மாட்டான்," என்று சொன்னாள்.

போவாஸ் ரூத்தை விவாகம் செய்தல்.

போவாஸ் பட்டண வாசலில் போய் உட்கார்ந்து கொண்டான். அப்போது போவாஸ் சொன்ன அந்தச் சுதந்திரவாளி அவ்வழியே வந்தான், போவாஸ் அவனை அருகில் அழைத்து உட்காரச் செய்தான். பின்னர், பட்டணத்து மூப்பர் பத்துப்பேரை அழைத்து அவர்களையும் உட்காரச் செய்தான். பின்னர் போவாஸ் தன் உறவினனை நோக்கி, "எலிமெலேக்கு என்னும் நம்முடைய சகோதரன் வைத்திருந்த வயல்நிலத்தின் பங்கை நகோமி விற்கப் போகிறாள். அதைச் சுதந்திர முறையாக மீட்டுக் கொள்ள விரும்பினால் எல்லோர் முன்நிலையிலும் மீட்டுக் கொள்ளும். விருப்பமில்லாவிட்டால் அதை நான் மீட்கிறேன். எல்லாரிலும் முதலில் உமக்கும், அதன்பிறகுதான் எனக்கு இவ்விஷயத்தில் உரிமையுண்டு", என்றான்.

அதற்கு அச்சுதந்திரவாளி "நான் அதை மீட்டுக் கொள்கிறேன்" என்றான்.

அதற்கு போவாஸ், நீர் நகோமியின் கையில் அந்த நிலத்தை வாங்கும் நாளில், மரித்தவனுடைய பேரை நிலை நிற்கச் செய்யும்படி, எலிமெலேக்கின் மோவாபிய விதவையான ரூத்தையும் வாங்கவேண்டும்," என்று சொன்னான்.

அதற்கு அம்மனிதன், "நான் என் சுதந்திரத்தைக் கெடுக்காதபடி, அதை மீட்டுக் கொள்ளமாட்டேன். நீர் அதை மீட்டுக் கொள்ளும்" என்றான். அக்காலத்தில் இஸ்ரவேல் மக்களிடையே ஒரு வழக்கமிருந்தது. அது என்னவெனில், அதாவது காணியை விற்கிறவன் அதை வாங்குபவனுக்குத் தன் பாதரட்சையைக் கழற்றிக் கொடுப்பான். எனவே அம்மனிதன் தன் பாதரட்சையைக் கழற்றிப் போவாசிடம் கொடுத்தான்.

அப்பொழுது போவாஸ் மூப்பரை நோக்கி, கூடியிருந்த சகல ஜனங்களையும் பார்த்து, "எலிமெலேக்கு வைத்திருந்த எல்லாவற்றையும், கிலியோனுக்கும், மக்லோனுக்கும் இருந்த எல்லாவற்றையும், நகோமியின் கையில் வாங்கிக் கொண்டேன் என்பதற்கு இன்றையதினம் நீங்கள் சாட்சி. அத்துடன் மக்லோனின் மனைவியாகிய மோவாபியப் பெண் ரூத் எனது மனைவியாகிறாள். இதுவுமல்லாமல், மரித்தவனுடைய சகோதரர்களுக்குள்ளும், ஊரார்களுக்குள்ளும், எலிமெலேக்கின் பேர் அற்றுப்போகாமல், மரித்தவனுடைய பேரை நிலை நிறுத்த இவ்வாறு செய்கிறேன். அதற்கு நீங்கள் எல்லோரும் இன்றையதினம் சாட்சி" என்றான்.

அதற்குச் சகல ஜனங்களும், மூப்பர்களும் அவனை நோக்கி, "நாங்கள் சாட்சிதான். உன் வீட்டிலே வருகிற மனைவியைக் கர்த்தர் இஸ்ரவேல் வீட்டைக் கட்டின்த, இரண்டுபேராகிய ராகேலைப் போலவும், லேயாளைப் போலவும் வாழ்த்திருக்கச் செய்வாராக. நீ எப்பிராத்திலே பாக்கியவானாய் இருந்து, பெத்லகேமிலே புகழ் பெற்றிருப்பாய் இந்தப் பெண்ணினிடத்தில் கர்த்தர் உனக்கு அருளிச் செய்யப் போகிற சந்தானத்திலே உன்வீடு தாமார் யூதாவுக்குப் பெற்ற பேரேசின் வீட்டைப் போலாகக் கடவது" என்றார்கள்.

போவாசும் அவன் முன்னோர்களும்

போவாஸ் ரூத்தை விவாகம் பண்ணினான். அவள் கர்ப்பந் தரித்து ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுக்கக் கர்த்தர் அநுக்கிரகம் பண்ணினார்.

அப்பொழுது பெண்கள் நகோமியைப் பார்த்து, "கர்த்தருக்கு ஸ்தோத்திரம். சுதந்திரவாளி அற்றுப் போகாதபடி அவர் உனக்குத் தயவு செய்திருக்கிறார். இக்குழந்தையின் பேர் இஸ்ரவேலிலே பிரபல்யமாகக் கடவது. அவன் உன் ஆத்துமாவுக்கு ஆறுதல் செய்கிறவனும், உன் முதிர்வயதிலே உன்னை ஆதரிக்கிறவனுமாயிருப்பான். உன்னைச் சிநேகித்த ஏழு குமாரரைப் பார்க்கிலும். உன் மருமகள் அவனைப் பெற்றாளே" என்றனர்.

அயல் வீட்டுக்காரப் பெண்கள் அக்குழந்தையை வாழ்த்தி, அதற்கு ஓபேத் எனப் பேரிட்டனர்.

அவன் தாவீதின் தகப்பனாகிய ஈசாயின் தகப்பன் பேரேசுடைய சந்ததியின் வம்ச வரலாறு: பேரேஸ் எஸ்ரோனைப் பெற்றான் எஸ்ரோன் ராமைப் பெற்றான். ராமா அம்மினதாபைப் பெற்றான்.

அம்மினதாப் நகசோனைப் பெற்றான். நகசோன் சல்மோனைப் பெற்றான். சல்மோன் போவாஸைப் பெற்றான். போவாஸ் ஓபேதைப் பெற்றான். ஓபேத் ஈசாயைப் பெற்றான். ஈசாய் தாவீதைப் பெற்றான்.

ரூத் 1 – 4 அதி.